ஸ்ரீஹரி :

# விவாகத்தில் வரதட்சிணை

(இக் காலத்தில் பரவியுள்ள ஓர் பெரும் பாவம்)

எழுதியவர் :

**ஹனுமான் பிரசாத் போத்தார்**

வெளியிடுவோர் :

**கீதா பிரஸ், கோரக்புர்**

பதிப்பித்தவர் :
கனஷ்யாம்தாஸ் ஜாலான்
கீதா பிரஸ், கோரக்பூர்

முதற் பதிப்பு: மார்ச், 1956
8000

அச்சிட்டவர் :
ஹிந்தி பிரசார பிரஸ், சென்னை-17

ஸ்ரீஹரி :

# விவாகத்தில் வரதட்சிணை

## (இக் காலத்தில் பரவியுள்ள ஓர் பெரும் பாவம்)

இறைவனிடம் திட நம்பிக்கை பூண்டு அவனையே அடைக்கலமாகக் கொண்டால் மனிதனுடைய பாவங்களெல்லாம் தாமே அழிந்து விடுகின்றன; அந்த மனிதனுக்கு எல்லா நலன்களையும் இறைவனே அருளுகிறான் என்பது உண்மை தான். ஆனால் அந்த நிலை எளிதில் கிடைக்கக் கூடியதல்ல. தூய சாதனையின் பயனாகவே பகவானுடைய அருள் கிட்டுகிறது. அப்போது தான் இறைவனிடம் பூரணமான திட நம்பிக்கை ஏற்படுகிறது. இந்நிலையில் தான் மனிதன் தன் வலிமை, வாழ்க்கை, அறம், பொருள், இன்பம், மோக்ஷம் எல்லாவற்றையும் இறைவன் திருவடிகளுக்கே அர்ப்பணித்து விட்டு, அத் தெய்வமே தஞ்சமென்று வாழ்கிறான். திட நம்பிக்கையற்ற சாதாரண ஜனங்கள் அந்த நிலைக்கு மிகவும் அப்பாற்பட்டவர்கள். அவர்கள் பகவானுடைய மங்கள குணங்களையும், மகிமைகளையும் கேட்டு, சிற்சில சமயம் சிறிது நம்பிக்கை கொள்கிறார்கள்; ஆனால் போதிய அளவு முன்னேறுவதற்கு முன்பாகவே பல விதத் தடங்கல்களில் சிக்குண்டு பின்தங்கி விடுகிறார்கள். இந்த இடையூறுகளில் சில முன் ஜன்மத்து வினைப்பயன்கள், மற்றவை தற்காலத்திய கூட்டுறவு, சூழ்நிலை முதலியவைகளால் உண்டாகின்றவை. இத்தகைய இடைஞ்சல்கள் அநேகம். இவைகளுக்குள் இப்போது மிக முக்கியமானது **பணக்கஷ்டம்**

தான். பணக் கவலைக்கு மூல காரணம் வயிற்றுப்பாடு அல்லது குடும்ப பாரம் என்பது பொதுவான எண்ணம். ஆனால் உண்மைக் காரணம் பலவித ஆசைகளில் நமக்குள்ள தீவிர ஈடுபாடு தான்.

புலன் வேட்கைகளைத் தணித்துக் கொள்வதையே தன் முதற் குறிக்கோளாகக் கொண்டு ஆனந்தப் படுபவனுக்குக் கஷ்டங்களும், கவலைகளும் அவன் சாகும் வரை தீரப் போவதில்லை. ஏனென்றால், இப்பேர்ப் பட்டவர்கள் தன் நிலைமைக்குத் தகுந்தபடி எளிமையாக வாழ வேண்டுமென்பதையே மறந்து விடுகிறார்கள். இதன் விளைவு என்னுகிறதென்றால், அவர்கள் எப்போதும் ‘ பணம், பணம் ’ என்றே தவிக்க வேண்டியிருக்கிறது. மேலும் பகவான், தர்மம் இவைகளைப்பற்றிச் சிந்திப்பதே அவர்களுக்கு அநாவசியமாகவும், இழிவாகவும், ஏன், வெறுத்து ஒதுக்க வேண்டியதாகவும் ஆகிவிடுகிறது. அவர்கள் பேராசையும், குரோதமும் கொண்டு அநியாய வழியிலாவது பொருள் திரட்ட முற்படுகிறார்கள். இவ்வழியிலேயே அவர்கள் வாழ்வும் கழிந்து விடுகிறது. பெறற்கரிய இந்தச் சிறந்த மனிதப் பிறவி பழி பாவங்களைச் சேகரித்துக் கொள்வதிலேயே வீணாக அழிந்து போகிறது. இதைப் போலப் பெரிய நஷ்டம் வேறு கிடையாது. இது ஈடு செய்ய முடியாத நஷ்டம். வாழ்நாள் கழிந்து போன பிறகு பச்சாத்தாபப் படுவதில் என்ன பயன்?

மனிதன் விரும்பி முயன்றால் முன் வினைகளையோ, அதன் விளைவான இடையூறுகளையோ அகற்றிவிட முடியுமென்றால், தற்காலத்துக் கூட்டுறவு, சூழ்நிலை முதலியவைகளால் உண்டாகும் தடைகளைப் போக்கிவிட முடியும்

என்பதில் சந்தேகமே கிடையாது. மனிதன் கெட்ட சகவாசத்தை விட்டொழித்து, உள்ளத்தில் உறுதியை வளர்த்துக் கொண்டானானால், அக் கூட்டுறவாலோ பலவீனத்தாலோ ஏற்படும் குற்றங்களையும், முறை தவறிய செயல்களையும் அவன் விலக்க முடியும். உண்மையில் நமக்கோ நம் குடும்பத்திற்கோ போதிய உணவு உடைகளைச் சம்பாதிப்பதென்பது அப்படியொன்றும் சாதிக்க முடியாத கடினமான காரியமல்ல. இப்போதுள்ள கஷ்டமெல்லாம் நாம் நம் தேவைகளை அளவுக்கு மேல் அதிகரித்துக் கொண்டு விட்டதால் ஏற்பட்டவை தான். அத் தேவைகளை எப்படியாவது நிரப்பிக் கொள்ள வேண்டுமென்கிற கட்டாய நிலைமை தான் நம் கடமையுணர்ச்சியை அழித்து விடுகிறது.

சற்றுச் சிந்தித்துப் பார்த்தால், நாம் சுய தேவைக்காகவோ அல்லது சமூகத்திற்காகவோ பல சந்தர்ப்பங்களில் ஏராளமாகப் பொருள் செலவு செய்து வருகிறோமென்பதை நன்கு உணரலாம். ஆனால் பணம் செலவு செய்வதற்குக் கொஞ்சமும் அவசியமில்லாத பல சந்தர்ப்பங்களில் நிறையச் செலவு செய்யும் கட்டாயத்தை நாமே ஏற்படுத்திக் கொண்டு விட்டோம். உணவு உடை, மற்றும் பல குடும்பச் செலவுகளுக்காக நாம் தேவையில்லாத அநேகப் பொருள்களை வாங்குகிறோம். அவைகளில்லாமல் வாழ்க்கை நடத்துவதில் எவ்விதத் தடங்கலும் ஏற்பட்டு விடாது. உதாரணமாக, மனிதன் இரண்டு துணிகளை வைத்துக் கொண்டு காலங்கடத்த முடியும்; ஆனால் அவன் நாலைந்து துணிகள் வாங்குகிறான். சாப்பாட்டில் இனிப்புப் பக்ஷணங்களும், விதவிதமான காய்கறி, ஊறுகாய் வகை

களும் இருக்க வேண்டுமென்ற அவசியம் கிடையாது. ஆனால் இவைகளுக்காக அவன் அதிகமாகச் செலவு செய்கிறான். சுத்தமான சிறிய வீட்டில் மனிதன் வசதியாக வாழ முடியுமென்றாலும், வெளிப் பகட்டிற்காகவே பெரிய பெரிய பங்களாக்களைக் கட்டுகிறான். பட்டுச் சால்வைகள், அத்தர், பௌடர், சோப்பு, க்ரீம், ரகவாரியான சோபா நாற்காலிகள், இப்படி ஆயிரக் கணக்கான ஆடம்பரப் பொருள்களில் பணத்தைத் தண்ணீர் போலக் கொட்டி வீணாக்குகிறான். இவைகளெல்லாம் சுய தேவைக்காகச் செய்யப்படுபவை. சமூகத்திலோ விவாகம், காதுகுத்தல், பூணூல் போடுதல் முதலிய கலியாணங்களுக்காகவும் இழவுச் சடங்குகளுக்காகவும் மனிதன் அநியாயமாக ஏராளமான பணத்தை விரயமாக்குகிறான். இதனால் ஏற்படும் பெரும் நஷ்டத்தை அவனுடைய சந்ததிகளும் அநுபவித்து அவதிப்பட வேண்டியிருக்கிறது. நூற்றுக் கணக்கான பெரிய குடும்பங்கள் அத்தகைய செலவுச் சுமையால் அழுந்தி அழிந்தே போயிருக்கின்றன, போய்க் கொண்டுமிருக்கின்றன.

இப்போது சில ஆண்டுகளாக செலவுகளைக் குறைக்க வேண்டும், பழைய பழக்க வழக்கங்களைச் சீர்திருத்த வேண்டுமென்றெல்லாம் பிரசாரம் நடந்து வருகிறது. இதன் பயனாகச் சில மாறுதல்களும் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால், செலவுகள் குறைய வேண்டியவை போக அதிகரித்திருக்கின்றன. செலவின் இனங்கள் மாறுபட்டனவே யொழிய செலவுகள் குறையவில்லை. முன்பெல்லாம் எந்தப் பொருள்களுக்காகப் பணம் செலவிடப்பட்டதோ, அப் பொருள்கள் பின்னால் ஆபத்து சமயத்திற்காவது பயன்

படக் கூடியவையாக இருந்தன. அவைகளை அடக்க விலைக்குக் கொஞ்சம் குறைவாகவாவது விற்றுப் பணமாக்கலாம். ஆனால் இப்போது செய்யப்படும் செலவுகளோ விழலுக்கிறைத்த நீர் தான். வெளி ஆடம்பரமும், ஃபேஷனும் மனிதர்களை அடிமைகளாக்கி விட்டன. இந்தக் கெடுதிகளுக்கெல்லாம் மூலகாரணம் ஆசைகளில் நமக்கேற்பட்டிருக்கும் தீவிர ஈடுபாடு தான். இதிலிருந்து விடுவித்துக் கொள்ளும் வழி, வைராக்ய சிந்தையுடன் ஈசனை வழிபடுவது தான். ஈசுவர வழிபாட்டுக்கு நாமசங்கீர்த்தனம் அவசியம். பண ஆசை பிடித்து அலைந்தால் நாம பஜனை செய்ய நேரமேது? ஆகையினால் தன் நலத்தையும், தன் சமூகம், தேசம், இகம், பரம் முதலியவைகளின் நலன்களையும் விரும்பும் ஒவ்வொரு மனிதனும் செலவினங்களைக் கட்டாயம் குறைத்துக் கொள்ளவேண்டும்; வாழ்க்கையில் எளிமையையும் சிக்கனத்தையும் கடைப்பிடிக்க வேண்டும். தனி நபரோ, அல்லது சமூகத்தாரோ செய்யும் வீண் செலவுகளைக் குற்றச் சாட்டுகளுக்குப் பயப்படாமல் உறுதியாகத் தடுக்க வேண்டும். இது ஒவ்வொருவனுடைய முக்கியக் கடமையாகும். பிறர் போலிக் கௌரவத்திற்காகவும் புகழுக்காகவும் கண்டபடி ஏராளமாகப் பணம் செலவழிக்கிறார்கள். பொதுமக்கள் இத்தகைய வெளி வேஷக்காரர்களை மதிக்கக் கூடாது; ஆனால் எளிய வாழ்க்கை நடத்தும் பெரியோர்களைப் போற்ற வேண்டும். அப்போது தான் அந்தப் போலிக் கௌரவப் பிரியர்களும் தன் வீண் செலவுகளைக் குறைப்பார்கள்.

முக்கியமாக இந்நாட்களில் விவாகங்களின் போது செய்யப்படும் அட்டூழியங்கள் மிகப் பயங்கரமானவை.

பூதங்கள் போன்ற செலவினங்கள் காரணமாகவே பல இளம் பெண்கள் விவாகமாகாமலேயே இருக்கிருர்கள்; அநேக உயர்ந்த குடும்பங்கள் அவதிப் படுகின்றன. இதனுலேயே ஆண்-பெண் இருவரிடமும் பிறவி முதற் கொண்டு ஓர் ஏற்றத் தாழ்வு வளர்ந்து வருகிறது. பெண்கள் விஷயத்தில் பல அநீதிகளும் இழைக்கப் படுகின்றன. ராஜஸ்தானத்தில் இந்த வரதட்சிணைக் கொடுமையாலேயே பிறந்த பெண் குழந்தைகளை விஷம் கொடுத்துக் கொன்று விடும் கொடிய பாவம் பரவியது. அதிக பெண்களைப் பெற்றவனின் வாழ்க்கை நரக வேதனையாகிக் கொண்டிருக்கிறது. ஏழைக் குடும்பத்தில் பிறந்த பெண்கள் தாய் தந்தையரின் கஷ்டங்களைக் கண்டு பொறுக்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டு விடுகிருர்கள். வங்காளத்தில் அத்தகைய குடும்பத்துப் பெண் ஸ்நேகலதா என்பவள் உடலில் தீ மூட்டிக் கொண்டு இறந்த சோகக் கதை பலருக்குத் தெரிந்தது தான். இன்றைக்கும் தன் ஏழைப் பெற்ருேர்கள் படும் கஷ்டத்தைக் கண்டு எத்தனையோ கன்னிப் பெண்கள் மனம் வெதும்பிக் கொண்டிருக்கிருர்கள். இந்த நிலையில், ஒவ்வொரு குடும்பத்தாரும் கலியாண விஷயத்தில் சில கட்டுப்பாடுகளை வகுத்துக் கொள்ள வேண்டியது முதற் கடமை. பெண்ணைப் பெற்றவர்கள் வீட்டையோ நிலத்தையோ விற்று, அல்லது பந்தகம் வைத்துப் பிள்ளை வீட்டாரைத் திருப்திப் படுத்தச் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. அவர்கள் வேறு என்ன செய்ய முடியும்? அப்படிப் பெண் வீட்டார் கொடுப்பது வெறும் சீர், வரதட்சிணை அல்ல; **அவர்கள் இதயத்து ரத்தம் தான் அது.**

என் நண்பர் ஒருவருக்குப் பல பெண்கள். ஒருத்திக்கு விவாக வயது ஆகிவிட்டது. 18 வயது முடிந்து விட்டது. பெண் நல்ல பண்பும், அழகும் உள்ளவள். உயர்ந்த குடும்பம். வரதட்சிணை கொடுக்கப் பணமில்லாததால் பெண்ணுக்கு விவாகம் செய்ய முடியாமல் அவர் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிருர். ஒருவரும் ஆயிரம், இரண்டாயிரத்திற்குக் குறைந்து பெண் பேசவே முன் வருவதில்லை என்கிருர். உத்தரப் பிரதேசத்திலிருந்து ஓர் அன்பர் எனக்குக் கடிதம் எழுதியிருந்தார். அவர் வக்கீல் தொழில் பார்த்தவர். அவருக்கு ஒரு பெண் இருக்கிருள். "பெண் பருவமடைந்து விட்டாள். வரதட்சிணைக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. மெட்ரிக் படித்த பிள்ளைக்கு, கார் வாங்கித் தருவதானல் மேலே பேசுங்கள் என்கிருர் பிள்ளையைப் பெற்றவர்." என்று எழுதியிருக்கிருர் அந்த அன்பர். இது கொடிய பாவம். இத் தீமை காட்டுத் தீ போல, ஒவ்வொரு ஹிந்துக் குடும்பத்திலும் பற்றிப் பரவிக் கொண்டிருக்கிறது. இதயம் படைத்த நேர்மையான சகோதர சகோதரிகளிடம் நான் பணிந்து வேண்டிக் கொள்வது இதுதான்: செல்வம் படைத்த நீங்கள் தர்ம மார்க்கத்தில் செல்ல விரும்புபவர்களானல், சுய தேவைகளையும், சமூகத்திற்கான வீண் செலவுகளையும் உடனே குறைத்துக் கொள்ளுங்கள். மேலும் தம் பிள்ளைகளுக்குத் தேடிச் சென்ருவது யோக்கியமான ஏழைப் பெண்களைக் கலியாணம் செய்து வையுங்கள். தர்மத்தில் நம்பிக்கையுள்ள, விவாகமாகாத வாலிபர்களே! நீங்கள் வரதட்சிணை வாங்காமலேயே விவாகம் செய்து கொள்வோம் என்று பிரதிக்ஞை செய்து கொள்ளுங்கள். இப்படிச்

செய்பவர்கள் தர்ம மார்க்கத்தில் நல்ல பலன்களைக் கட்டாயம் பெறுவார்களென்று நான் உறுதி கூறுகிறேன்.

என்னுடைய இந்தத் தாழ்மையான வேண்டுகோள் உலகரீதியாக மட்டுமல்ல, ஆத்மீக வழியிலும் முக்கியத்துவம் உள்ளது. ஆகையால் பண்புள்ள அன்பர்களையும், தாய்மார்களையும், விவாகமாகாத இளைஞர்களையும், இந்த வேண்டுகோளைக் கடைப்பிடிப்போமென்று சபதம் செய்துகொள்ளுமாறு நான் பணிவுடன் வேண்டிக் கொள்ளுகிறேன். ஏனென்றால், பண ஆசை பகவானைப் பூஜிப்பதற்குப் பெரும் தடையாக உள்ளது. இந்தத் தடையை அகற்ற வேண்டியது மிகவும் இன்றியமையாதது. தர்மத்தில் பற்றுள்ளவர்களும், பண்பாடுள்ளவர்களுமான அன்பர்கள் என் வேண்டுகோளின்படி கட்டாயம் பிரதிக்ஞை செய்துகொள்வார்களென்று நம்புகிறேன்.

உண்மையில் செல்வம் மிகவும் இழிந்த பொருள். அருளே நிதியாகக் கொண்ட பரமாத்மாவுக்கு இணையாகப் பணத்தைக் கருதுவதே பாவம். இதற்கு, உலகங்களுக்கெல்லாம் கதிரொளி வீசும் சூரியனுக்கு ஈடாக மின்மினியைக் கூறுவது கூட ஒப்பாகாது. ஆகையால் நீங்கள் பண ஆசையில் அதிகம் முயன்று உங்கள் சக்தியை விரயமாக்க வேண்டாம். நல்லுணர்வு மங்கிப்போன இந்தக் காலத்தில் எங்கும் தனபூஜை தான் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. ஜனங்கள் பண ஆசையிலும், பணக் கவலையிலும் சிக்குண்டு இறைவனையே மறந்துகொண்டிருக்கிறார்கள். இதைத் தான் நான் பலமுறை எடுத்துக் கூற விரும்புகிறேன். பணத்தைச் சிக்கனமாகச் செலவழிக்க வேண்டுமென்பதனால் பணத்திற்கு மதிப்புக் கொடுத்து

விட்டதாக எண்ணிவிடக் கூடாது. பணம் மிகவும் இழிந்த பொருளென்பதை உணரவேண்டும்; கிடைத்த பணத்தைக் கண்டபடி வீணுகச் செலவழித்து விட்டு, அதை மேலும் சம்பாதிப்பதற்கு அல்லும் பகலும் பாடுபட்டுக் கொண்டிருப்பதினுல் தான் பணத்திற்கு மதிப்பு அதிகமாகி விடுகிறது. இது பெரும் தவறு. நாம் நம் தேவைகளை எவ்வளவுக்கெவ்வளவு குறைத்துக் கொள்ளுகிருேமோ, அவ்வளவுக்கு பணத்தின் மதிப்பும் குறைகிறது. நாமும் பழி பாவங்களிலிருந்து விடுபட்டு பரம்பொருளை அணுகும் மார்க்கத்தில் முன்னேற முடியும். நாம் வளர்த்துக்கொள்ளும் தேவைகளே பண ஆசையை அதிகம் வளர்த்து நம்மைக் கண்டபடி அல்லாடச் செய்கின்றன. பகவானை மறந்து நாம் வாழ்க்கையில் உழலுவதற்கும் அவையே காரணம். என்றைக்கு நம் ஆசை அழிகிறதோ, அன்றே நாம் பெரும் அரசர்களாகி விடுவோம். பக்த கபீர்தாஸ் சொன்னபடி, "ஆசையும், கவலையும் அற்ற மனிதன் யாருக்கும் அடிமையாக இருக்க வேண்டாம். எவனுக்குத் தேவை எதுவும் கிடையாதோ அவன் தான் உலகத்திற்கே சக்கரவர்த்தி." என்பது எவ்வளவு உண்மை!

*　　*　　*

நம் நாட்டில் சீர் வரிசைகள், வரதட்சிணை முதலியவை வாங்கும் வழக்கம் இருக்கும் வரை பிள்ளைகள் வியாபாரப் பொருள்கள் போல விற்கத் தான் படுவார்கள்; பணமில்லாத ஏழைத் தாய் தந்தையர்கள் தம் அருமைப் பெண்களுக்கு ஏற்ற வரன்கள் (பிள்ளைகள்) கிடைக்காமல் திண்டாடுவார்கள். இந்த முறையால் சமூகத்தில் பல பாவங்

கள் பரவிக் கொண்டிக்கும். சிறிது காலத்திற்கு முன்பு கல்கத்தாவில் உள்ளம் நடுங்கும் ஓர் சம்பவம் நடந்தது. ஸ்ரீ கிஷோரீ மோஹன் மஜும்தார் என்பவருடைய நான்கு பருவமடைந்த பெண்கள் விஷம் தின்று தற்கொலை செய்து கொள்ள முயன்றார்கள். மூவர் இறந்து விட்டார்கள், ஒருத்தி தான் பிழைத்தாள். அந்த மஜும்தார் கண்ணிய மான உயர் குலத்தில் பிறந்தவர். அவருக்கு ஏழு பெண் கள். மூன்று பெண்களுக்குக் கலியாணம் செய்த திலேயே அவர் சொத்துக்கள் அழிந்து கடனும் ஏறி விட் டது. பிறகு அவரிடம் மற்றப் பெண்களுக்கு வரதட்சிணை கொடுக்கப் பணம் இல்லை. பணமில்லாத பெண்ணுக்குப் பிள்ளை எப்படிக் கிடைப்பான்? வீட்டில் எப்போதும் கவலையும் துயரமும் தான் குடி கொண்டிருந்தன. இப்படி அவதிப்படும் பெற்றோர்களைக் கண்ட பெண்கள் தம் மால் இனி இவர்களுக்குக் கஷ்டம் வேண்டாமென்று எண்ணியே விஷத்தைச் சாப்பிட்டுச் சாக முற்பட்டார் கள். தற்கொலை செய்து கொள்வது சட்டப்படிக் குற்றம் தான், தர்மப்படிப் பெரும் பாவமுங் கூட. கஷ்டம் தாங்காமல் தற்கொலை செய்து கொள்வதை ஆதரிக்க முடியாது. ஆனாலும், அந்த இளம் பெண்கள் தன் ஏழைத் தந்தையின் கஷ்டத்தைக் காணச் சகிக்காமல் வேறு வழி யின்றி தற்கொலை செய்து கொள்ளத் துணிந்ததைக் கண்டு உள்ளம் படைத்த எவனும் இரக்கப் படாமல் இருக்க மாட்டான். இம்மாதிரி வீட்டிற்குள்ளேயே நடந்து மறையும் சோக சம்பவங்கள் எத்தனையோ! கஷ்டமும் கவலையும் உடலையும், உள்ளத்தையும் அரிக்க, வேதனைப் பட்டுக்கொண்டே இறக்கும் பெற்றோர்கள் எத்தனையோ

பேர்கள். இது நம் சமூகத்தில் பரவியுள்ள சாதாரண மான பாவமல்ல; மிகக் கொடிய பெரும் பாவம்!

உள்ளம் படைத்த ஒவ்வொரு மணமாகாத வாலிபனையும், தர்மத்தில் நம்பிக்கையுள்ள தாய் தந்தையர்களையும் நான் தர்மத்தின் மேல் ஆணையாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்: விவாகத்தில் வரதட்சிணை வாங்கமாட்டோமென்று நீங்கள் பிரதிக்ஞை செய்து கொள்ளுங்கள். இந்த வரதட்சிணைக் கொடுமையை வேரோடு ஒழிக்கப் பாடு படுங்கள்!

## வரதட்சிணையால் ஏற்பட்ட சில பயங்கரக் கொடுமைகள்

ஒரு தந்தைக்கு மூன்று பெண்கள் இருந்தார்கள். இரு பெண்களுக்கு எப்படியோ கஷ்டப்பட்டு விவாகம் நடந்து விட்டது. மூன்றுமவளுக்கும் ஒரு இடம் நிச்சயமாயிற்று. பிள்ளை வீட்டாரின் மண ஊர்வலமும் வந்து சேர்ந்தது. பெண்ணைப்பெற்றவரால் பிள்ளை வீட்டார் கேட்டபடி வரதட்சிணை கொடுக்க முடியவில்லை. கலியாணத்தை நடத்தாமலேயே பிள்ளை வீட்டார் திரும்பிப் போய் விட்டார்கள். பெண்ணின் தந்தை அவமானமும், துக்கமும் தாங்காமல் விஷத்தைத் தின்று தற்கொலை செய்து கொண்டார். கலியாணப் பெண்ணும், அவள் தாயும் கிணற்றில் விழுந்து உயிரை விட்டார்கள்.

ஒரு பெண்ணின் தந்தை பூர்வீகச் சொத்தான தன் ஒரே வீட்டை அடகு வைத்து கலியாணப் பிள்ளைக்கு வர

தட்சிணை கொடுத்தார். பிறகு கடன் அடைக்க முடியாமற் போகவே, வீடு ஏலத்தில் போய் விட்டது. அக்குடும்பம் வீடில்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறது.

ஓர் விதவை கடன் வாங்கித் தன் பெண் கலியாணத்தை நடத்தினள். கடன் கொடுத்த புண்ணியவானுக்குப் பேராசை தலை தூக்கியது. அந்த அம்மாளுக்கு இருந்த ஒரே வீட்டைத் தனக்குக் கொடுத்து விட வேண்டுமென்று கட்டாயப் படுத்தினன். அவள் தன் ஆதரவற்ற நிலையைக் கூறிக் கெஞ்சியும் அவன் மனம் இளகவில்லை. ஏலம் போட்டு வீட்டைத் தன் வசப்படுத்திக் கொண்டு விட்டான். பிறகு அந்த ஏழைக் குடும்பம் தெருவில் நிற்க வேண்டியதாகி விட்டது.

ஒரு தந்தை தன் மூத்த பெண் கலியாணத்தைக் கடன் வாங்கி நடத்தினர். பிறகு அடுத்த பெண் கலியாணத்தையும் நிச்சயம் செய்து கொண்டு வந்தார். முந்திய கடனே தீரவில்லை. இரண்டாவது பெண் கலியாணத்தின் போது கடன்காரன் வாரண்டு பிறப்பித்து பெண்ணின் தந்தையைக் கைது செய்யச் சொல்லி விட்டான். விவாகம் நின்றுவிட்டது. பெண் துக்கம் தாங்காமல் உடம்பில் மண்ணெண்ணையை ஊற்றிக்கொண்டு, எரிந்து செத்துப் போனள்.

மற்றொரு பெண்ணுக்குக் கலியாணம் நிச்சயமாகி விட்டது. பெண்ணுக்குப் பதினறு வயது. முகூர்த்த நாளும் குறிப்பிட்டாகி விட்டது. அதை விட்டால் பிறகு ஒண்ணரை வருஷத்திற்கு நாளே கிடையாது. பிள்ளையின் தகப்பன் முகூர்த்த தினத்திற்கு மூன்று நாட்கள் முன்பு கலியாணத்திற்கு மறுத்து விட்டான். காரணம், வேறொரு

பெண் வீட்டார் அதிக வரதட்சிணையும், ஒரு காரும் கொடுப்பதாகச் சொன்னாராம். இதைக் கேட்டதுமே பெண்ணைப் பெற்றவர் இதயத் துடிப்பு நின்று போய் இறந்து விட்டார்.

நம் பாரத நாட்டின் தலைசிறந்த பெரிய மனிதர் ஒருவருக்கு இருபத்தெட்டும், முப்பதும் வயதுள்ள பெண்கள் பணமில்லாமையால் கன்னிகளாகவே இருக்கிறார்கள். பெற்றோர்கள் தினமும் மனம் புழுங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படி லட்சக்கணக்கான சோக சம்பவங்கள் வீடு வீடாக நிறைந்திருக்கின்றன. எங்களுக்குத் தெரிவிக்கப்பட்ட அநேக சம்பவங்களில் ஒரு சிலவற்றையே மேலே குறிப்பிட்டிருக்கிறேன். இதையெல்லாம் படித்த பிறகாவது உங்களுக்கு—வரதட்சிணை வெறும் செல்வமல்ல, பெண் வீட்டாரின் ரத்தம் அது; பெண் வீட்டாரைக் கொலை செய்வதற்கும், உள்ளம் துடித்துத் தற்கொலை செய்து கொள்ளத் தூண்டுவதற்கும் அமைந்த கொடிய சாதனம் தான் வரதட்சிணை!—என்பதில் சந்தேகமுண்டா?

பிள்ளைகளைப் பெற்றவர்களையும், மணமாகாத பிள்ளைகளையும் நான் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன்: நீங்களெல்லோரும் 'விவாகத்தில் வரதட்சிணை வாங்கமாட்டோம்' என்று உறுதியுடன் பிரதிக்ஞை செய்து கொள்ளுங்கள்.

*

உள்ளம் படைத்த ஒவ்வொரு மண
மாகாத வாலிபனையும், தர்மத்தில் நம்
பிக்கையுள்ள தாய் தந்தையர்களையும்
நான் தர்மத்தின் மேல் ஆணையாகக்
கேட்டுக்கொள்ளுகிறேன் : விவாகத்தில்
வரதட்சிணை வாங்கமாட்டோமென்று
நீங்கள் பிரதிக்ஞை செய்துகொள்ளுங்
கள், இந்த வரதட்சிணைக் கொடுமையை
வேரோடு ஒழிக்கப் பாடு படுங்கள்!

*